**அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ்**
**ஜுலை 4 வரவேற்பு நிகழ்வு**
**ஜுலை 2, 2019**

**தூதுவர் டெப்லிட்ஸ்** : இன்றைய மாலைப்பொழுதில் இணைந்துகொண்ட அனைவருக்கும் மிக்க நன்றி. ஐக்கிய அமெரிக்காவின் 243ஆவது சுதந்திர தின கொண்டாட்ட நிகழ்வில் உங்கள் அனைவரையும் வரவேற்பதையிட்டு நான் கௌரவமடைகிறேன்.

இன்றைய எமது தொனிப்பொருள் "அமெரிக்காவை பகிர்வோம்" என்பதாகும். இங்குள்ள அனைவருக்கும், பார்வையாளர்கள் மத்தியில் உள்ள எனது குழுவினர் மற்றும் நான் உள்ளிட்ட அனைவருக்கும் அமெரிக்கா என்றால் என்ன என அர்த்தப்படுவதை பகிர்ந்துகொள்ள நாம் விரும்புகின்றோம். எமது பணியாளர்கள் இந்த பேட்ஜ்களை அணிந்திருப்பதை நீங்கள் காண்பீர்கள். அவர்களின் சொந்த மாநிலம், பிறந்த இடம் என்பன அதில் காணப்படுகின்றன. அவர்களின் அமெரிக்க அனுபவம் பற்றி நீங்கள் சில அவர்களிடம் கேள்விகளைக் கேளுங்கள். நியூயோர்க், கலிபோர்னியா, மிச்சிகன், இல்லினோய்ஸ் அல்லது வேறு ஏதேனும் மாநிலங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம், அவர்களுக்கு உங்களுடன் பகிர்ந்துகொள்வதற்கான கதைகள் இருக்கும். பதிலுக்கு நீங்களும் உங்கள் நாட்டைப் பற்றி சிறிது எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள். அதை நாம் வரவேற்கிறோம்.

கொழும்பில் இராஜதந்திர வாழ்க்கை வாழ்வதால் எம்மை இலகுவில் அடையாளம் கண்டுவிட முடியும் என நான் நினைக்கின்றேன். பல கூட்டங்களுக்கு நாம் செல்கின்றோம், இதுபோன்ற வரவேற்பு நிகழ்ச்சிகள் பலவற்றில் கலந்துகொள்கின்றபோதும், இலங்கை பற்றி மாத்திரமன்றி இந்த உலகத்தை சுற்றியுள்ள அனைத்து இடங்கள் பற்றியும் மேலும் பல சுவாரஷ்யமான விடயங்களை அறிந்துகொள்ள விரும்புகின்றோம்.

நான் அமெரிக்கராக இருப்பது எனக்குப் பல அர்த்தங்களை வழங்குகிறது. இது எமது ஜனநாயக விழுமியங்களை தழுவியிருந்தாலும் அல்லது தொழில்முனைவுக்கான ஊக்கத்தைக் காண்பித்தாலும், மிகவும் முக்கியமான விடயம், எமது நாட்டின் பல்வகைத்தன்மை எனக்குப் பல அர்த்தங்களைக் கொடுக்கிறது. அமெரிக்கன் என்ற ரீதியில் எமது தேசிய அடையாளத்தில் இது முக்கிய பங்காற்றுகிறது.

நான் இலங்கை பற்றித் தெரிந்துகொண்டபோது, நாம் இதேபோன்ற விழுமியங்களையும், அபிலாஷைகளையும் எமது நாடுகளில் உண்மையில் நாம் பகிர்ந்துகொள்வதாக நினைக்கின்றேன். நான் தற்பொழுது குறிப்பிட்ட சில விழுமியங்கள் அதில் உள்ளடங்குகின்றன.

நான் கடந்த ஒக்டோபர் மாதம் இங்கு வந்திருந்தேன், கடந்த எட்டு மாத காலப்பகுதியில் அழகான இந்த நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குப் பயணிப்பதற்கும், மக்களை சந்திப்பதற்கும், பிரமிக்கத்தக்க சில காட்சிகளையும் கண்டுகளிப்பதற்கும் வாய்ப்புகள் கிடைத்திருந்தன. ஜோன் பிளக் மற்றும் அவருடைய மனைவி இஸபெல்லா ஆகியோரின் கல்லறைகளுக்கு நான் விஜயம் செய்திருந்தேன். 1850களில் சிலோனுக்கான முதலாவது அமெரிக்க கொன்சுலாக இருந்தவர் அவர். அவரது ஓய்விடம் காலில் இருக்கிறது. அமெரிக்க மிஷனரிகளால் ஸ்தாபிக்கப்பட்ட தேவாலயங்கள் மற்றும் பாடசாலைகள் பலவற்றை நான் யாழ்ப்பாணத்தில் பார்வையிட்டேன். யூஎஸ்எயிட் நிறுவனத்தின் உதவியுடன் கிழக்கில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் பெண்களை நான் சந்தித்திருந்தேன். அமெரிக்கா உதவியளித்து சாத்தியமாக்கிய மகாவலி அபிவிருத்தி திட்டத்தினால் ஏற்பட்ட நன்மைகளை நாடு முழுவதிலும் என்னால் காண முடிந்தது.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பங்காண்மைக்கு முக்கியமான பண்பொன்று இருக்கிறது. அது பரஸ்பர மரியாதை. இதனையே இன்றைய மாலையில் நான் வலியுறுத்த விரும்புகின்றேன். இறையாண்மைக்கான மரியாதை, தரமான வாழ்வுக்கான மரியாதை, தேசங்கள் என்ற ரீதியிலான எமது வேறுபாடுகளுக்கான மரியாதை என்பன வழங்கப்பட வேண்டும்.

பலமான, இறைமையுள்ள மற்றும் சுதந்திரமான இலங்கைக்கு அமெரிக்கா ஆதரவு வழங்குகிறது. இந்து - பசுபிக் பாதுகாப்புக்கு இலங்கை பங்களிப்புச் செலுத்தி வருகிறது. இதனாலேயே, அமெரிக்க மக்களால் பரிசாக வழங்கப்பட்ட இலங்கை கடற்படையின் மிகப்பெரிய கப்பலான எஸ்.எல்.என்.எஸ் கஜபாஹு கப்பலை சேவையில் இணைத்துக்கொள்ளும் நிகழ்வில் கடந்த மாதம் ஜனாதிபதி சிறிசேனவுடன், நானும் கலந்துகொண்டேன்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் வெளிநாட்டு உதவிகளில் சார்ந்திருக்காத அதன் பொருளாதார பாதைக்கு அமெரிக்கா ஆதரவளித்து வருகிறது. இதனாலேயே மத்திய வங்கி, நிதி அமைச்சு போன்றவற்றுக்கு நாம் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதுடன், மிலேனியம் சலஞ்ச் கோர்ப்பரேஷன் ஊடாக வறுமை ஒழிப்புத் திட்டங்களில் சுமார் 500 மில்லியன் டொலரை அன்பளிப்பாக வழங்குவதற்கு அமெரிக்க அரசாங்கம் தயாராகவுள்ளது.

இலங்கையின் ஜனநாயகம் மற்றும் அனைத்து பிரஜைகளினதும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நிறுவனங்களைப் பலப்படுத்தல் என்பவற்றுக்கு அமெரிக்கா உதவி வருகிறது. சட்டத்தின் ஆட்சியும் முக்கியமானது. சகலரும் தான் சார்ந்த இனம், மதம் போன்றவற்றால் அச்சத்துடன் வாழாதிருப்பதற்கான சூழலை நாம் உறுதிப்படுத்த வேண்டும். இதனாலேயே மாவட்ட சர்வமத கவுன்சில் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு போன்ற அறிவூட்டல்களுக்கு நாம் உதவி வருகின்றோம்.

அமெரிக்க மக்கள் மற்றும் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் என்ற ரீதியில் நானும் எனது குழுவினரும் எமது இரு நாடுகளுக்கும் இடையிலான பங்காண்மையை மேலும் பலப்படுத்துவதற்கு தொடர்ந்தும் பணியாற்றுவோம். இறைமையுள்ள இரு நாடுகள் சமாதானம் மற்றும் சுபீட்சமான எதிர்காலத்துக்காக இணைந்து பணியாற்றுகின்றன. ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற துன்பியல் சம்பவத்தின் பின்னரான எதிர்காலம் நாளுக்கு நாள் சுபீட்சமடைந்து வருகிறது. நாம் பகிர்ந்துகொள்ளும் பங்காண்மை ஊடாக சமாதானம் மற்றும் சபீட்சமான எதிர்காலத்தை நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

எனவே இன்றையதினம் இணைந்துகொண்ட உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி கூற விரும்புகின்றேன். 1776ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது முதல் 243 வருடங்களில் அமெரிக்கா 70 வருடங்கள் இலங்கையை ஒரு நண்பராக பல விடயங்களைப் பகிர்ந்துள்ளது. சிலோன் ஆக எமக்கிருந்த தொடர்பு அதிலிருந்து பல வருடங்கள் பின்னோக்கிச் செல்வதுடன், இது நிச்சயமாக கொண்டாடப்பட வேண்டியது என நான் கருதுகின்றேன்.

இன்று அமெரிக்கா பற்றி சில விடயங்களைப் பகிர்ந்துகொள்வதுடன், இந்த மாலைப் பொழுதை அனுபவியுங்கள். எம்முடன் இணைந்து கொண்டமைக்கு நன்றி.